**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 113/2018 மரியஆனந்தராஜ் (பிசா 2) தேதி: 14.07.2026.</u>**

**<u>பிசா. 2 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மாரியப்ப நாடார் குடும்பத்தை பற்றி எனக்கு 40 வருடங்களாக தெரியும். மாரியப்ப நாடார் குடும்பத்திற்கு உள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஒரளவுக்கு தெரியும். 1ம் வாதி புஸ்பராஜ் கழுகுமலையில் கடலைமிட்டாய் கம்பெணி வைத்திருந்தார். கடலைமிட்டாய் கம்பெணி நடத்துவதற்கு முன்பு ரைஸ்மில் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். அவர் இறக்கும் வரை ரைஸ்மில் கட்டிடத்தில் வைத்து தான் கடலைமிட்டாய் கம்பெணி நடத்தி வந்தார் என்றால் இல்லை. அவர் கடலைமிட்டாய் நடத்தி வந்த இடத்தை மரியதங்கராஜ் என்பவருக்கு வடகைக்கு விட்டு இன்றுவரை புஸ்பராஜ் குடும்பத்தினர் வாடகை வாங்கி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. புஸ்பராஜ் மனைவி, மகன்கள், மாரியப்ப நாடாருக்கு பாத்தியப்பட்ட லைன்வீட்டில் தற்போது வரை வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி அவரது சகோதரர்களுக்கு பாக விடுதலை எழுதிக்கொடுத்த விபரம் 1996ம் வருடம் எனக்கு தெரியும். அந்த பாக விடுதலை ஆவணம் எழுதும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். பி.சா.ஆ.3 பாக விடுதலை ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பாக விடுதலை ஆவணம் எழுதிய போது நான் உடன் இருந்ததாக கூறுவதும், அதற்கு முன்பு பேச்சு வார்த்தை நடந்த போது நானும் உடன் இருந்ததாக கூறுவதும்

உண்மை இல்லை என்றால் சரியல்ல. பேச்சுமுத்து எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரியப்ப நாடார் குடும்பத்தில் என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள விபரங்கள் பொய்யானவை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.